**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி**
**முன்னிலை – திருமதி.P. கனிமொழி , B.L.,**
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
2025 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 25 ம் நாள் திங்கட்கிழமை
திருவள்ளுவர் ஆண்டு 2056, விசுவாவசு வருடம் ஆவணி மாதம் 09ம் நாள்
**இ.ம.எண். 3/2025**
**இல்**
**அசல் வழக்கு எண். 2/2025**

| | |
|---|---|
| 1. | மயிலாடுதுறை மாவட்டம், தரங்கம்பாடி தாலுக்கா, காழியப்பநல்லூர், மேலத்தெருவில் வசிக்கும் காலஞ்சென்ற சின்னதுரை மகளும், செல்லதுரை மனைவியுமான 45 வயதுள்ள மாலதி. |
| 2. | மயிலாடுதுறை மாவட்டம், தரங்கம்பாடி தாலுக்கா, பரசலூர் அஞ்சல், நக்கீரர் தெருவில் வசித்து வரும் காலஞ்சென்ற சின்னதுரை பேரனும், காலஞ்சென்ற தெட்சிணாமூர்த்தி மகனுமான 36 வயதுள்ள கணேஷ்குமார். |

..மனுதாரர்கள்/ வாதிகள்

//எதிர்//

| | |
|---|---|
| 1. | மயிலாடுதுறை மாவட்டம், தரங்கம்பாடி தாலுக்கா, பரசலூர் அஞ்சல், நக்கீரர் தெருவில் வசித்து வரும் காலஞ்சென்ற கணேசன் மனைவி சுசிலா. |

..எதிர்மனுதாரர்/ பிரதிவாதி

மனுதாரர், இம்மனுவானது மனு சொத்தினை அளவீடு செய்ய ஓர் வழக்கறிஞர்/ஆணையர் அவர்களை நியமனம் செய்து நில அளவையர் உதவியுடன் மனு சொத்தினை அளவீடு செய்து அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்ய உத்தரவு கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இம்மனு நீதிமன்ற கட்டணமாக ரூ.20 செலுத்தப்பட்டுள்ளது.

மனு 16.06.2025ம் தேதியில் தாக்கல் செய்யப்பட்டு 16.06.2025 அன்று கோப்புக்கு எடுக்கப்பட்டது.

இம்மனுவானது இந்நீதிமன்றத்தில் என்முன்பாக 25.08.2025 அன்று இறுதியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டு மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. P. பிரேம்குமார், அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் கடந்த 03.02.2025 தோன்றாதரப்பினராக்கப்பட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலித்தபின் இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும்.

**உத்தரவாணை**

இந்த மனுவை அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

**<u>சொத்துவிபரம்</u>**

பழைய நாகப்பட்டினம் மாவட்டம், தற்போதைய மயிலாடுதுறை மாவட்டம், தரங்கம்பாடி தாலுக்கா, பரசலூர் கிராமத்தில்,

1. சர்வே எண்.49/2-ல் 9 1/4 செண்ட் புஞ்சை. (பத்திரப்படி உள்ளது)

<u>நான்கெல்லை:-</u>

தெருவிற்கு தெற்கு, ராமாசாமி முதியார் புஞ்சைக்கு வடக்கு, ராமாசாமி படையாட்சி புஞ்சைக்கு கிழக்கு, உன்னுடைய புஞ்சைக்கு மேற்கு இதற்குட்பட்டது.

2. சர்வே எண்.49/3-ல் 2 3/4 செண்ட் புஞ்சை. (பத்திரப்படி உள்ளது)

<u>நான்கெல்லை:-</u>

கிரய புஞ்சைக்கு கிழக்கு, உன்னுடைய புஞ்சைக்கு மேற்கு, தெருவுக்கு தெற்கு, ராமாசாமி முதலியார் புஞ்சைக்கு வடக்கு- இதற்குட்பட்டது.

தற்போது வருவாய்துறையினரால் 451 மேற்படி புல எண்கள் உட்பிரிவு செய்யப்பட்டு 49/2C1 மற்றும் 49/2C2 என வருவாய்த்துறை பதிவேடுகளில் பதிவாகியுள்ளது.

என் கையெழுத்தும் இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டு, 2025ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 25 ஆம் நாள் என்னால் வழங்கப்பட்டது.

KANIMOZHI

Digitally signed by KANIMOZHI
Date: 2025.08.25 16:52:10 +0530

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**

**தரங்கம்பாடி.**